மெட்ரோ ரயில்களில் விதிமுறை மீறிய

# 27 பேரிடம் ₹5,400 அபராதம் வசூல்

சென்னை, ஜூலை 1-

மெட்ரோ ரயில்களில் கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றாத 27 பேரிடம் ரூ.5,400 அபராதமாக வசூல் செய்யப்பட்டது.

கொரோனா ஊரடங்கில் தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னையில் மெட்ரோ ரயில் சேவைகள் கடந்த 21ம் தேதி தொடங்கியது. 50 சதவீத பயணிகள் மெட்ரோ ரயிலில் பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், பயணிகள் தனிமனித இடைவெளியை கடைபிடிப்பதற்காக மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் பயணிகளும் காத்திருக்கும் பகுதிகளில் தனிமனித இடைவெளி குறித்த ஸ்டிக்கர்கள் வைக்கப்பட்டுள்ளன.

பயணிகளின் விழிப்புணர்வுக்காக பாதுகாப்பான பயணம் குறித்து பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகள் மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரயில்களில் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. இதேபோல், பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசம் சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது.

மேலும், மெட்ரோ ரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனிமனித இடைவெளியைக் கண்காணிப்பதற்காகத் தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணிப்புக் கேமரா மூலம் பயணிகளின் தனிமனித இடைவெளி கண்காணிக்கப்படுகிறது.

இந்தநிலையில், கடந்த மாதம் 21ம் தேதி முதல் 29ம் தேதி வரையில் முகக்கவசம் அணியாத 27 பயணிகளிடமிருந்து ரூ.5400 அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே, பயணிகள் 100 சதவீத பாதுகாப்பை உறுதி செய்ய அரசு அறிவித்த கொரோனா தடுப்பு விதிமுறைகளை சரிவர கடைபிடிக்க வேண்டும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.